சுருக்கம்

கோயம்புத்தூர் மாநகராட்சி – மேட்டுப்பாளையம் சாலை முதல் சத்தி சாலை வரையிலான சங்கனூர் பள்ளம் அபிவிருத்தி திட்டத்தில் மீதமுள்ள தொகையில் ரூ.3.12 கோடியினை திருச்சி சாலையில் வாலாங்குளத்தில் இருந்து வெளியேறும் உபரி நீரை சங்கனூர் பள்ளத்தில் இணைக்க ஏதுவாக பிரத்தியேக கால்வாய் அமைத்தல் திட்டத்திற்கு பயன்படுத்தி கொள்ள அனுமதி வழங்கி ஆணை வெளியிடப்படுகிறது.

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மா.ந.4) துறை

அரசாணை (ப) எண்.142

நாள் 19.03.2025
ஸ்ரீகுரோதி, பங்குனி – 05
திருவள்ளுவர் ஆண்டு 2056

படிக்கப்பட்டது:–

1. அரசாணை (ப) எண்.40, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 05.02.2021
2. அரசாணை (நிலை) எண் 27, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 22.03.2023
3. கோயம்புத்தூர் மாநகராட்சி ஆணையர் அவர்களின் கடித ந.க. எண்.8431/2021/எம்.டி5, நாள் 22.08.2024.
4. நகராட்சி நிர்வாக இயக்குநரின் கடித ந.க.எண்.7169/ 2018/TP2, நாள் 05.09.2024.

*****

ஆணை:–

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் கோயம்புத்தூர் மாநகராட்சியில் மேட்டுப்பாளையம்– கோயம்புத்தூர் சாலை முதல் சத்தி சாலை வரை உள்ள சங்கனூர் பள்ளம் வளர்ச்சி பணிகளை மேற்கொள்ள நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டு உட்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிகள் நிதியிலிருந்து (Infrastructure and Amenities Fund) ரூ.49.00 கோடி விடுவித்து ஆணையிடப்பட்டது.

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் உட்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிகள் நிதியின் கீழ் கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலம், வாலாங்குளத்தில் இருந்து வெளியேறும் உபரி நீரை சங்கனூர் பள்ளத்தில் இணைக்க ஏதுவாக திருச்சி சாலையில் சுங்கம் சந்திப்பில் இருந்து சங்கனூர் பள்ளம் வரையில் 1,730 மீ நீளத்திற்கு பிரத்யேக கால்வாய் அமைத்தல் பணிக்கு ரூ.9.00 கோடி மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

3. மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கோயம்புத்தூர் மாநகராட்சி ஆணையாளரின் கடிதத்தில், மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் நிர்வாக அனுமதி அளிக்கப்பட்ட சங்கனூர் பள்ளம் மேம்பாட்டு பணிகளில் மொத்தம் உள்ள 2.30 கி.மீ நீளத்தில், 1.768 கி.மீ அளவிற்கு பணிகள் முடிக்கப்பட்ட நிலையில்,

தொடர்ந்து பணிகளை மேற்கொள்ளும் பொழுது ரூ.46.00 கோடி அளவிற்கு செலவினம் ஏற்படும் என கணக்கிடப்பட்டுள்ளதாகவும், மேற்குறிப்பிட்டுள்ள செலவினத்தில் ரூ.3.50 கோடி அளவிற்கு திட்ட மதிப்பீட்டில் சேமிப்பு தொகை இருக்கும் என எதிர்ப்பார்க்கப்படுவதாகவும், மேலும், சங்கனூர் பள்ளம் மேம்பாட்டு திட்ட மதிப்பீட்டில் அனுமதி பெறப்பட்ட வடிவமைப்பில் சங்கனூர் பள்ளத்தில் வாய்க்கால் தளத்தில் கல் அடுக்குகள் (Stone aprons) அமைப்பு ஏற்படுத்துவதற்கு உண்டான இனம் சேர்க்கப்பட்டிருந்தாகவும், மேலும் 208 மீ நீளத்திற்கு கல் அடுக்குகள் கொண்ட GABION அமைப்புகள் ஏற்படுத்துதல் பணிக்கும் சேர்த்து திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருந்த நிலையில், தற்போது பணியிடத்தின் தன்மைக்கு ஏற்ப திருத்திய வடிவமைப்பில் சங்கனூர் பள்ளத்தில் பாயும் நீரினை பூமிக்குள் உட்புகும் வகையில் கற்கள் அடுக்கு மற்றும் GABION அமைப்பிற்கு மாற்றாக மணல் பரப்பினை ஏற்படுத்த உத்தேசிக்கப்பட்டு அதன்படி பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதால், திட்ட மதிப்பீட்டில் குறிப்பிடதக்க சேமிப்பு தொகை இருக்கலாமென கோயம்புத்தூர் மாநகராட்சி ஆணையர் தெரிவித்துள்ளார்.

4. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் நிர்வாக அனுமதி அளிக்கப்பட்ட பணியில் திருச்சி சாலையில் 1,730 மீ நீளத்திற்கு கால்வாய் அமைப்பதற்கு வேலை உத்திரவு வழங்கப்பட்டு பணியானது சாலையின் பக்கவாட்டில் ஏற்கனவே உள்ள மழைநீர் வடிகாலினை ஒட்டி அமைக்க உத்தேசிக்கப்பட்ட நிலையில் பணி மேற்கொள்ளும் பொழுது இடையூறாக குடிநீர் குழாய்கள், பாதாள சாக்கடை குழாய்கள், மின்சார கேபிள்கள் மற்றும் இதர கேபிள்கள் பாதிக்கப்பட்டுள்ளதால், இப்பணியினை சாலையின் பக்கவாட்டில் மேற்கொள்ள இயலவில்லை. எனவே, திருச்சி சாலையின் மையத்தில் சாலையினை வெட்டி வெள்ள நீர் கால்வாய் அமைக்க உத்தேசித்து தேசிய நெடுஞ்சாலைத் துறையின் வழிகாட்டுதலின்படி IRC தரநிலைக்கு வடிகால் வடிவமைப்பு மாற்றி அமைக்கப்பட்டு பணியானது 1,465 மீ நீளத்திற்கு முடிக்கப்பட்ட நிலையில், தற்போது எதிர்வரும் பருவமழை காலங்களை கருத்தில் கொண்டு மீதமுள்ள 265 மீ நீளத்திற்கு கால்வாய் பணிகளை முற்றிலுமாக முடித்து வாலாங்குளத்தின் உபரி நீரை சங்கனூர் பள்ளத்திற்கு கொண்டு சேர்க்கவும், வெள்ளநீர் வடிகால் அமைப்பதற்காக சேதப்படுத்தப்பட்ட தேசிய நெடுஞ்சாலை துறைக்கு சொந்தமான சாலையை மறுசீரமைக்கவும் கூடுதலாக ரூ.3.12 கோடி நிதி தேவைப்படுவதாக கோயம்புத்தூர் மாநகராட்சி ஆணையர் தெரிவித்துள்ளார்.

மொத்த மதிப்பீடு (ரூபாய் கோடியில்)	மொத்த நீளம் (மீ)	முடிவுற்ற பணி (மீ)	மீதமுள்ள நீளம் (மீ)	மொத்த நீளம் (1730 மீ) மேற்கொள்ள தேவையான கூடுதல் செலவினம் (ரூபாய் கோடியில்)
9.00	1730	1465	265	3.12

5. எனவே, உட்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிகள் (2021–22 மற்றும் 2022–23) திட்டத்தின் கீழ் திருச்சி சாலையில் வாலாங்குளத்தில் இருந்து வெளியேறும் உபரி நீரை சங்கனூர் பள்ளத்திற்கு கொண்டு சேர்க்கவும், வெள்ளநீர் வடிகால் அமைக்க வேண்டி சேதப்படுத்தப்பட்ட சாலையை சீரமைக்கவும் கூடுதலாக தேவைப்படும் ரூ.3.12 கோடி நிதியினை உட்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிகள் (2020–21) நிதியில் மேற்கொள்ளப்படும் சங்கனூர் பள்ளம் அபிவிருத்தி திட்டத்தின் சேமிப்பு தொகையில் மீதமுள்ள ரூ.3.50 கோடியிலிருந்து பயன்படுத்திக் கொள்ள

அனுமதியளிக்குமாறு நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களை நகராட்சி நிர்வாக இயக்குநர் கேட்டுக்கொண்டுள்ளார்.

6. இந்நேர்வு தொடர்பாக, நகர் ஊரமைப்பு இயக்குநர் தனது கடிதத்தில், 06.12.2024 அன்று நடைபெற்ற உட்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிகள் குழுவின் (Infrastructure and Amenities promotion committee) கூட்டத்தில் மேற்காணும் பொருண்மை தொடர்பாக விவாதிக்கப்பட்டு, நகராட்சி நிர்வாக இயக்குநரின் கருத்துருவினை ஏற்று சங்கனூர் பள்ளம் அபிவிருத்தி திட்டத்தில் மீதமுள்ள ரூ.3.50 கோடியிலிருந்து ரூ. 3.12 கோடியினை திருச்சி சாலையில் வாலாங்குலத்தில் இருந்து வெளியேறும் உபரி நீரை சங்கனூர் பள்ளத்தில் இணைக்க ஏதுவாக பிரத்தியேக கால்வாய் அமைத்தல் திட்டத்திற்கு பயன்படுத்திக்கொள்ள ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது எனத் தெரிவித்துள்ளார். மேலும் நகராட்சி நிர்வாக இயக்குநரின் கருத்துருவின் மீது உரிய ஆணை வேண்டி அரசுக்கு அனுப்பியுள்ளார்.

7. மேற்காணும் சூழ்நிலையில், மேலே பத்தி 5ல் காணும் நகராட்சி நிர்வாக இயக்குநரின் பரிந்துரையினை கவனமாக பரிசீலனை செய்து, கோயம்புத்தூர் மாநகராட்சி மேட்டுப்பாளையம் சாலை முதல் சத்தி சாலை வரையிலான சங்கனூர் பள்ளம் அபிவிருத்தி திட்டத்தில் [உட்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிகள் நிதி (2020–2021) திட்டத்தில்] சேமிப்பாக உள்ள ரூ.3.50 கோடியிலிருந்து ரூ.3.12 கோடியினை திருச்சி சாலையில் வாலாங்குளத்தில் இருந்து வெளியேறும் உபரி நீரை சங்கனூர் பள்ளத்தில் இணைக்க ஏதுவாக பிரத்தியேக கால்வாய் அமைத்தல் திட்டத்திற்கு [உட்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிகள் நிதி (2021–2022 மற்றும் 2022–2023) திட்டத்திற்கு] பயன்படுத்தி கொள்ள அனுமதி வழங்கி அரசு ஆணையிடுகிறது.

// ஆளுநரின் ஆணைப்படி //

தா. கார்த்திகேயன்,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை–600 028.
ஆணையர், கோயம்புத்தூர் மாநகராட்சி, கோயம்புத்தூர் – 641 001.
நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை– 600 028.

நகல்:–
மாண்புமிகு அமைச்சர், நகராட்சி நிர்வாகம் அவர்களின்
முதுநிலை நேர்முக உதவியாளர், தலைமைச் செயலகம், சென்னை – 600 009.
அரசு முதன்மைச் செயலாளரின் முதுநிலை தனிச் செயலர்,
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, சென்னை – 600 009.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (அநமு2) துறை, சென்னை – 600 009.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

ஏ.தே.பொன்னுசாமி.
பிரிவு அலுவலர்.
19/12/2024